# Eastern University Sri Lanka
## Faculty of Commerce and Management
### External Degrees
### First Examination in BBA 2006/07, B. Econ 2007/08
### EXB/EXE 1074 Economic Theory

LIBRARY
11 2010
Eastern University, Sri Lanka.

எல்லா வினாக்களுக்கும் விடை தருக நேரம்- 03மணி

1. (a) " பொருளாதாரப் பிரச்சினைகளுக்கு காரணமாக அமைவது அருமைப்பாடேயாகும்."

   (i) அருமைப்பாடு என்பதனை விளக்குக.

   (ii) அடிப்படை பொருளாதாரப் பிரச்சினைகளை விபரிக்குக.

   (05 புள்ளிகள்)

   (b) " சிற்றினப் பொருளியல்" என்பதால் விளங்கிக் கொள்வது யாது? அதில் உள்ளடங்கும் விடயங்களைக் குறிப்பிடுக.

   (05 புள்ளிகள்)

   (c) சுதந்திரச் சந்தைப் பொருளாதாரமொன்றின் பிரதான இயல்புகள் எவை?

   (05 புள்ளிகள்)

   (d) கருதுகோள் அடிப்படையில் உற்பத்திச் சாத்திய வளையி ஒன்றினை வரைந்து அதில் பின்வருவனவற்றைக் குறித்துக் காட்டுக.

   (1) சந்தர்ப்பச் செலவு.

   (2) வேலையின்மை நிலைமை.

   (3) திறமையற்ற வளப்பயன்பாடு.

   (05 புள்ளிகள்)

2. (a) மொத்தப் பயன்பாட்டினையும்(Total utility) எல்லைப் பயன்பாட்டினையும்(Marginal utility) வேறுபடுத்தி உதாரணங்கள் மூலம் விளக்குக.

   (05 புள்ளிகள்)

   (b) கேட்கப்படும் அளவில் ஏற்படும் மாற்றம்(Change in quantity demanded) வழங்கப்படும் அளவில் ஏற்படும் மாற்றம்(Change in quantity supplied) இரண்டையும் வேறுபடுத்துக.

   (05 புள்ளிகள்)

   (c) குறித்த பண்டத்தின் கேள்வி, நிரம்பல் சமன்பாடுகள் வருமாறு.

   $$Qd = 110 - 10p.$$
   $$Qs = -100 + 20p$$

   இப்பண்டத்தின் சந்தைச் சமநிலை விலை, தொகை என்பவற்றைக் கணிப்பிடவும்

   (05 புள்ளிகள்).

(d) பின்வரும் சம்பவங்கள் இடம் பெறும் போது குறித்த பண்டத்தின் சமநிலை விலைக்கு என்ன நடக்கும்? வரைபடங்களை பயன்படுத்தி விளக்குக.

(i) குறித்த பண்டத்தின் கேள்வி அதிகரிக்கும் போது.

(ii) குறித்த பண்டத்தின் நிரம்பல் வீழ்ச்சியடையும் போது.

(05 புள்ளிகள்)

3. (a) "நேர்கோட்டு வடிவில் அமைந்த கேள்விக் கோடொன்றின் விலை நெகிழ்ச்சியானது பூச்சியத்திலிருந்து முடிவிலிவரை வேறுபடலாம்." வரைபடத்தின் உதவியுடன் விளக்குக.

(05 புள்ளிகள்)

(b) குறுங்கால உற்பத்தித் தொழிற்பாட்டை விளக்கி, அதில் மொத்த உற்பத்தி, எல்லை உற்பத்தி என்பவற்றுக்கிடையேயான தொடர்பினை விளக்குக.

(05 புள்ளிகள்)

(c) பின்வரும் அட்டவணையைப் பூர்த்தி செய்க.

| மொத்த வெளியீடு | மொத்த நிலையான செலவு | மொத்த மாறும் செலவு | மொத்தச் செலவு | சராசரி செலவு |
|---|---|---|---|---|
| 0 | 100 | 0 | 100 | |
| 1 | | 100 | | |
| 2 | 100 | 160 | | |
| 3 | | 200 | | 100 |
| 4 | | 260 | | |
| 5 | 100 | | 440 | |

(05 புள்ளிகள்)

(d) ஒரு நிறைபோட்டிச் சந்தை அமைப்பின் பிரதான இயல்புகளை விளக்குக.

(05 புள்ளிகள்)

4. (a) பேரினப் பொருளியலை சுருக்கமாக விளக்குக. பேரினப் பொருளியல் பிரச்சினைகள் என எவற்றைக் குறிப்பிடுவீர்?

(05 புள்ளிகள்)

(b) மொத்தக் கேள்வி என்பதனை சுருக்கமாக விளக்கி, அதனை ஏற்படுத்தும் பொருளாதாரத்தின் பல்வேறு துறையினரையும் குறிப்பிடுக.

(05 புள்ளிகள்)

(c) பண்டமாற்றுப் பொருளாதாரத்தில் காணப்பட்ட பல்வேறு குறைபாடுகளை எவ்வாறு பணத்தின் வருகை நிவர்த்தி செய்தது?

(05 புள்ளிகள்)

LIBRARY
11 ... 20..
Eastern University, Sri Lanka.

(d) வெற்றிடங்களை நிரப்புக.

| வருமானம் (Y) | நுகர்வு (c) | சேமிப்பு (S) | MPC | MPS |
|---|---|---|---|---|
| 500 | 475 | 25 | //////////// | //////////////// |
| 600 | 550 | 50 | | |
| 700 | 625 | 75 | | |
| 800 | 700 | 100 | | |
| 900 | 775 | 125 | | |
| 1000 | 850 | 150 | | |

MPC = எல்லை நுகர்வு நாட்டம்
MPS = எல்லை சேமிப்பு நாட்டம்

(05 புள்ளிகள்)

5. பின்வருவனவற்றுக்கு சிறுகுறிப்பு எழுதுக.

(a) தனியுரிமையில் விலை பேதப்படுத்தல்.

(b) பணத்திற்கான கேள்வி

(c) சர்வதேச வர்த்தகத்தின் பலாபலன்கள்.

(d) உற்பத்தி நிறுவனம் ஒன்றின் நீண்டகால சராசரி செலவுக் கோடு.

(20 புள்ளிகள்)

கூகூகூகூகூகூகூகூகூகூகூகூகூகூகூகூகூகூ